ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1480 - 2007 ජනවාරි 12 වැනි සිකුරාදා - 2007.01.12

1480 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 28 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 28 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, சனவரி 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, சனவரி 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இங்கிலாந்து மிடில் செக்ஸ் இல. 9, பாஸ்டர் வீதி, வெம்பிலி வடக்கு மிடில் செக்ஸ்சை சேர்ந்தவரும் தற்போது 53/9 டபிள்யு. ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு, 6 இல் வசிக்கும் சின்னத்துறை சிவகடாட்சம் ஆகிய நான், இலக்கம் 25/1, அலெக்சாந்திரா வீதி, கொழும்பு - 06ஐச் சேர்ந்தவரும் தற்பொழுது இல. 62 டேவிட்சன் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 04 இல் வசிக்கும் திருமதி தவராசா கௌரி சங்கரி அவர்களுக்கு திரு. சந்திரா பெரேரா, சமந்தி ஆகிய சாட்சியங்கள் முன்னிலையில் 1996 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி சட்டத்தரணியும் நொத்தாரிசுமான சுஜாத்தா அழகுபெருமா அவர்களினால் அத்தாட்சிபடுத்தப்பட்டு முடிவாக்கப்பட்ட தத்துப் பத்திரம் இல. 120 இத்தால் தவிர்த்து ரத்துச் செய்யப்பட்டு செல்லு படியாகாதென்று பொதுமக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இத்தால் அறிய தருகின்றேன்.

சின்னத்துரை சிவகடாட்சம்.

1- 184

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ராகம,பேரலந்த, ஆசியாநந்த வீதி, இல. 123/பீ/3/4 இல் வசிக்கும் தேகிரிகே செரீன் பிரீடா பெரேரா ஆகிய நான், மிஹிர் இல. 186, தொட்டுபல வீதி, அமன்தொலுவ, சீதுவையில் வசிக்கும் மல்லவதந்திரிகே ருக்மன் குமார் பெரேரா என்பவருக்கு பகிரங்க நொத்தாரிசு எஸ். ஏ. பீ. எச். பீ. செனரத் என்பவரால் 2004.11.24 ஆந் திகதி எழுதிப் பதிவு செய்த இல. 3386 எனும் உறுதி மூலம் உரிமைபெற்ற காணியை விற்றல் அல்லது ஒப்படைப்பதற்கு எனது அட்டோர்ணி தத்துவக்காரராக நியமித்து என்னால் 2006.04.18 ஆந் திகதி ஒப்பமிடப்பட்ட வெளிநாட்டு அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்வதாக இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்படி தத்துவத்தின் கீழ் இதன் பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டீ. எஸ். எஃப். பெரேரா,
பேரலந்த, ராகம.

1- 185

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - திம்பிரிகஸ்யாய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான விற்பனை*

### பெறுமதியான சொத்து ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபை எல்லைக்குள் ஹேக்கந்தரையில் அமைந்துள்ளதும். கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. டீ. ரீ. தர்மதிலக்க அவர்களால் 2003, யூலை 03 இல் அத்தாட்சிப்படத்தப்பட்ட முறி இல. 588 இன் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்டுள்ள பாதையுரிமை, அடங்குவதானதுமான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் 1999, நவெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1657 இல் துண்டு 32 எனக்குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "வெல்லங்கிரிய எஸ்டேட்" என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணியாகும்.**

**(காணியின் விஸ்தீரணம் : 10.71 பேர்ச்சஸ்)**

*(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் சொத்தை ஈடுவைத்த கடமைப்பட்டவரான கமல்நீல் சேனக்க சிதந்த ரத்வத்தை அவர்கள் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. டீ. ரீ. தர்மதிலக அவர்களால் 2003, யூலை 03 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 588 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே விபரிக்கப்படும் சொத்தை, அதேயிடத்தில் 2007.01.26 ஆந் திகதி மு. ப. 10.30 இற்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, ஒற்றோபர் 26 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சிச் சபைகளுக்கான வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ. 2,000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை "திம்பிரிகஸ்யாய கிளை முகாமையாளரிடம் (தொ. பே. 4519862/258260" அல்லது

"கொழும்பு 10, டீ. பீ. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி டவர், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், பிரதம முகாமையாளரிடம் (மீளப்பெறல்)" பெறலாம். (தொ. பே. : 011 2661815/2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நில அளவையாளர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல.: 2863121

1-218/1

---

**ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - மாத்தளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான விற்பனை*

**பெறுமதியான சொத்து ஏல விற்பனை**

***ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்தை அதே இடத்தில் 2007, சனவரி 29 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.***

***மத்திய மாகாண, மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை கிழக்கு இரத்தோட்டை நகர சபை எல்லைக்குள் தற்போதும் மாத்தளை பள்ளேசியபற்று இரத்தோட்டையில் ஹொம்பலதன்னவில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. தொலொஸ்வெல அவர்களால் 1966, ஒற்றோபர் 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 104 இல் துண்டு டீ1 மற்றும் துண்டு சீ எனக்குறிக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எம். ஜயசேக்கர அவர்களால் 1968, ஏப்பிறல் 01 ஆந் திகதியிடப்பட்டு உப பிரிவாகப் பிரிக்கப்பட்டதுமான காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் கஹட்டகஹமுலவத்த அல்லது கஹட்டகஹமுலஹேன என அழைக்கப்படும் வரிமதிப்பீட்டிலக்கம் 18 ஐக் கொண்ட காணி.***

***(காணியின் விஸ்தீரணம்: துண்டு டீ 1 - 3 பேர்ச். துண்டு சீ - 1.2 பேர்ச்)***

*(கடமைப்பட்டவரும், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் சொத்தை ஈடுவைத்தவருமான அப்துல் கரீம் மொஹமட் ரிசாட், கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேரா அவர்களால் 2005, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 601 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2005, நவெம்பர் 18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, நவெம்பர் 23 ஆந் திகதிய "தி ஐலன்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- ஏலத்தின் இறுதியில், சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சிச் சபைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ. 2,000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

குறிப்பிடப்பட்டவாறு, 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மாத்தளைக் கிளை முகாமையாளரை தொ. பே. 0662224409-10/0662223868 இலும் அல்லது "கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தை, இல. 479, ஹ. ந. வ. கோபுரம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், பிரதம முகாமையாளர் (கடன்மேற்பார்வை, மீள்பெறுகை)" அவர்களை தொ. பே. 0112661815/2661816 இலும் தொடர்புகொண்டு பெறலாம்.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நில அளவையாளர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல.: 2863121

1-218/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.